தொல்காப்பிய மன்றம் – கனடா
Association for Tolkappiyam - Canada
தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

# தொல்காப்பிய விழாப் போட்டிகள் - 2023

## பொது அறிவுப் போட்டி (வினா-விடை): பிரிவு - 7 (2012-இல் பிறந்தோர்)

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களில், கேட்கப்படும் வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.**

1. தமிழ் மொழியில் உள்ள உயிர்நெடில் எழுத்துக்கள் எவை?
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

2. தமிழ் மொழியில் உள்ள முதலெழுத்துகள் எவை?
உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும்

3. தமிழ் நெடுங்கணக்கில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?
இருநூற்று நாற்பத்தேழு

4. தமிழ் எழுத்துக்களின் வகைகள் எவை?
1.உயிர்எழுத்து, 2. மெய் எழுத்து, 3. உயிர்மெய் எழுத்து, 4. ஆய்த எழுத்து

5. முத்தமிழ் என அழைக்கப்படுபவை எவை?
இயல், இசை, நாடகம்

6. வல்லின மெய்யெழுத்துகள் எவை?
க், ச், ட், த், ப், ற்

7. தமிழ் மெய் எழுத்துக்களில் வரும் இரண்டு இன எழுத்துக்களைக் கூறுக?
க-ங, ச-ஞ, ட-ண, த-ந, ப-ம, ற-ன

8. தமிழில் உள்ள சொற்களின் வகைகள் எவை?
பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்

9. பண்டைய தமிழ் இலக்கண நூல் எது?
தொல்காப்பியம்

10. தொல்காப்பியத்தில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
மூன்று (3)

11. தொல்காப்பியத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் எத்தனை இயல்கள் உள்ளன?
ஒன்பது (9)

10. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?
இளங்கோ அடிகள்

11. யாழ்நூலை எழுதியவர் யார்?
சுவாமி விபுலாநந்தர்

12. சுவாமி விபுலாநந்தர் முதல் தமிழ் பேராசிரியராக கடமையாற்றிய பல்கலைக்கழகம் எது?
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

13. திருக்குறள் எத்தனை அதிகாரங்களைக் கொண்டுள்ளது?
நூற்று முப்பத்து மூன்று

14. ஔவையார் இயற்றிய நூல்கள் எவை?
ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி

15. தொல்காப்பியத்தின் முப்பிரிவுகளும் எவை?
எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்

16. நன்னூல் என்னும் நூலை எழுதியவர் யார்?
பவணந்தி முனிவர்

17. இலங்கையர்கோன் இராவணனின் கொடியின் சின்னம் என்ன?
வீணை

18. இத்தாலியரான 'ஜோசேப் பெஸ்கி' தனக்கு வைத்துக்கொண்ட தமிழ்ப் பெயர் என்ன?
வீரமாமுனிவர்

19. முதலாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை முதலில் ஒழுங்கமைத்த ஈழத்தவர் யார்?
தனிநாயகம் அடிகள்

20. புரட்சிக் கவிஞர் என அழைக்கப்படுபவர் யார்?
பாரதிதாசன்

21. முச்சங்கங்கள் எவை?
முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம்

22. மூவேந்தர் எனப்படுவோர் யாவர்?
சேர, சோழ, பாண்டிய மன்னர்கள்

23. பூம்புகார் எந்த நாட்டின் தலைநகராக இருந்தது?
சோழ நாடு

24. வஞ்சி எந்த நாட்டின் தலைநகராக விளங்கியது?
சேர நாடு

25. மதுரை எந்த நாட்டின் தலைநகராக விளங்கியது?
பாண்டிய நாடு

26. அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு அரசாண்ட தமிழ் மன்னன் ஒருவரின் பெயரைக் கூறுக?
எல்லாளன்

27. இலங்கையின் பூர்வீகக் குடிகள் யாவர்?
இயக்கர், நாகர் எனப்படுவோர்.

28. இலங்கையில் முதன் முதலில் வெளிவந்த தமிழ்ப் பத்திரிகை எது?
உதயதாரகை

29. 'ஆடிப் பிறப்பிற்கு நாளை விடுதலை...' என்னும் பாடலைப் பாடியவர் யார்?
நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

30. ஈழத்திலும் தமிழகத்திலும் பாடசாலைகளை நிறுவித் தமிழ் வளர்த்தவர் யார்?
ஆறுமுக நாவலர்

31. தமிழர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டு அவரின் பெயரில் இயங்கிவரும் தமிழ்ப் பல்கலைக்கழகம் எது?
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

32. ஐம்பெரும் பூதங்கள் எனப்படுபவை எவை?
1. நிலம் 2. நீர் 3. தீ 4. காற்று 5. வானம்

33. ஐவகை நிலங்கள் எவை?
1. குறிஞ்சி 2. முல்லை 3. பாலை 4. மருதம் 5. நெய்தல்

34. மலையும் மலை சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?
குறிஞ்சி

35. காடும் காடு சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?
முல்லை

36. வயலும் வயல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?
மருதம்

37. கடலும் கடல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்?
நெய்தல்

38. புறநானூறு எந்தக் காலத்தில் தோன்றிய இலக்கியம்?
சங்க காலம்

39. கடற்கோளால் அழிந்த தமிழகத்தின் பண்டைய நகரங்களில் ஒன்றின் பெயர் கூறுக?
பூம்புகார், கொற்கை, முசிரி, தென்மதுரை

40. திரிகடுகம் எனப்படும் மூலிகைகள் எவை?
சுக்கு, மிளகு, திப்பிலி

41. உழவன் என்பதன் எதிர்ப்பாற் சொல் யாது?
உழத்தி

42 தமிழரின் தற்காப்பு விளையாட்டுகளில் ஒன்றைக் கூறுக
சிலம்பாட்டம் , களரி

43. தமிழரின் வீரவிளையாட்டுகளில் ஒன்றைக் கூறுக?
ஏறு தழுவுதல் (ஜல்லிக்கட்டு)

44. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
மறைமலை அடிகள்

45. தமிழ் இலக்கணத்தில் உள்ள வேற்றுமைகள் எத்தனை?
எட்டு

46. சேர்த்து எழுதுக: நான் + ஐ =?
என்னை

47. தாய் என்பதற்குரிய ஒத்தசொல் ஒன்றைக் கூறுக?
அம்மா, அன்னை, ஐயை

48. தனது நாணயத்தில் தமிழ் இலக்கங்களைக் கொண்டுள்ள நாடு எது?
மொறிசியஸ்

49. தமிழ்த் தாத்தா என அழைக்கப்படுபவர் யார்?
உ. வே. சாமிநாத ஐயர்

50. ஈழத்தமிழர் வரலாற்றில், "கறுப்பு ஜூலை" எனப்படும் நிகழ்வுகள் இடம்பெற்ற ஆண்டு எது?
1983

51. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்ட ஆண்டு எது?
1981

52. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எந்த மாதத்தில் நினைவு கூரப்படுகின்றது?
மே மாதத்தில்

53. Heart attack என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
மாரடைப்பு

54. Cancer என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
புற்றுநோய்

55. Allergy என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
ஒவ்வாமை

56. Diabetic என்பதற்குரிய தமிழ்ச்சொல் யாது?
நீரிழிவு

57. Mother tongue என்பதைத் தமிழில் எவ்வாறு வழங்குவர்?
தாய்மொழி

58. Internet என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
இணையம்

59. Website என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
இணையத்தளம்

60. Unicode Font என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
ஒருங்குறி எழுத்துரு

61. Browser என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
உலாவி

62. Laptop computer என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
மடிக்கணினி

63.Software என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
மென்பொருள்

64. Keyboard என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
விசைப்பலகை

65. Computer virus என்பதற்கு உரிய தமிழ்ச் சொல் யாது?
கணினி நச்சுநிரல்

66. கனடாவின் தலைநகரம் எங்கே அமைந்துள்ளது?
ஒட்டாவா

67. கனடாவில் எத்தனை மாகாணங்கள் உள்ளன?
10

68. தை மாதத்தில் கொண்டாடப்படும் தமிழர் திருநாள் எது?
தைப்பொங்கல்

69. கனடாவில் தமிழ் மரபுத் திங்கள் எந்த மாதத்தில் கொண்டாடப் படுகின்றது?
ஜனவரி மாதத்தில்

70. தமிழ் மரபுத் திங்களைக் கனடா அரசு உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்ட ஆண்டு எது?
2016

- மேலே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மேலதிகமாகவும் தேர்வின் போது வினாக்கள் கேட்கப்படும்.
- போட்டியாளர்களின் தரவரிசையை (1ம், 2ம், 3ம் இடங்களை) நிர்ணயிப்பதில் சிக்கல் ஏற்படின் அம்மேலதிக வினாக்களின் புள்ளிகள் கருத்திற் கொள்ளப்படும்.